[7th February 1959

Sri D. S. AUTHIMOOLAM : அந்த ரோடின் எஸ்டிமேட் தொகை எவ்வளவு ? நிதி நிலைமை இல்லாததனால் அந்த ரோடின் வேலை நடப்பதற்கு என்ன வசதி செய்யப்படுகிறது ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : எஸ்டிமேட் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

New Colleges

*** 101Q.—Sri S. M. ANNAMALAI :** *நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—*

புதிய கல்லூரிகளை ஏற்படுத்த திட்டம் ஏதேனும் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Sri S. M. ANNAMALAI : மாணவர்கள் அதிகமாகப் படிக்க கல்லூரிக்கு வருகிற நேரத்தில் கல்லூரிகளில் இடம் இன்மையினால் அவர்கள் படிப்பை நிறுத்த வேண்டியிருக்கிறது. கல்லூரிகளில் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது புதுக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும். புதுக் கல்லூரிகளை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை என்று சொல்வதற்குக் காரணம் பணம் இல்லை என்ற காரணம் தானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM:இப்படித்தான் தப்பானபுள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் பேசுவது வழக்கமாக இருக்கிறது. இன்றைக்கு 10 ஆயிரத்துற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வசதி இருக்கிறது. ஆனால் சேர வருகிறவர்கள் அவ்வளவு பேர்கள் இல்லை. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து படிக்க கல்லூரிகளில் இடம் இருக்கிறது. ஸ்தானத்தைக் காலியாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்க கல்லூரிகளில் அதிக மாணவர்கள் வருவது போலவும், அங்கே இடமில்லை போலவும் இவர்கள் பேசி வருகிறார்கள்.

Sri A. GOVINDASAMY : தென்னாற்காடு மாவட்டத்தில் அண்ணாமலை யூனிவர்ஸிடி ஒன்றுதான் இருக்கிறது. மேலும் கடலூரில் ஒரு கல்லூரி திறக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது இருக்கக் கூடிய கல்லூரிகளிலேயே போதுமான மாணவர்கள் இல்லை. இன்னும் அதிகமாக மாணவர்கள் படிக்க வந்தாலும் இடம் இருக்கிறது ஆகவே ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கல்லூரி ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம்.

Abolition of untouchability

*** 102 Q.—Sri P. G. MANICKAM :** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—*

(அ) Phonogram இசைத்தட்டுகள் மூலமாகத் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்ய சர்க்காரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

(ஆ) அவ்வாறு எடுக்கப்பட்டுவரின், விவரங்கள் யாவை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்துவதற்காக சிறந்த பாடகர்களால் பாடப்பட்ட நான்கு பாடல்களைப் பதிவு செய்து இரு இசைத் தட்டுகள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் 500 தட்டுகளை அரசாங்கம் வாங்கி உள்ளது. இவற்றை கிராமபோன் வைத்துள்ள அதிகாரிகளுக்கும் ஏனைய சமூக நல சங்கங்களுக்கும் பிரசாரத்திற்காகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 120 தட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மீதியுள்ளவற்றையும் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன

7th February 1959]

Sri P. G. MANICKAM : தலைவர் அவர்களே, இந்த இசைத் தட்டுகளை வானொலி நிலையத்திலிருந்தும், பஞ்சாயத்து போர்டுகளில் உள்ள ரேடியோ மூலமும் ஒலிபரப்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த இசைத்தட்டுகளை கிராம போன் மூலமாகத்தான் உபயோகிக்க முடியும். எங்கெங்கே கிராமபோன் இருக்கிறதோ அங்கங்கே அனுப்பப்படும்.

Sri K. B. S. MANI : இவற்றையெல்லாம் கிராமபோன் மூலமாகத் தான் வைக்க முடியும் என்று சொன்னால் அது முடியாத காரியம். ரேடியோ நிலையத்திலிருந்து காலையிலோ, மாலையிலோ ஒவ்வொரு ரெக் கார்டு வைக்க வேண்டுமென்று உத்தரவு போட்டால்தான் கிராமங்களில் உள்ள ரேடியோ செட்டிகளின் மூலம் அது ஒலி பரப்பப்படுவதை எல்லோ ராலும் கேட்க முடியும். ஆகவே தீண்டாமை ஒழிப்புக்காக தினமும் முதலாக அல்லது இறுதியாக வானொலி மூலாமக ஒலி பரப்ப ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நாம் உத்தரவு பிறப்பிக்க முடியாது. ஆலோசனை தான் சொல்ல முடியும்.

Srimathi KAMALAMBUJAMMAL : தீண்டாமை ஒழிப்புக்கு மன மாறுதல் அவசியம். மனமாறுதல் செய்வதற்கு அரசாங்கம் என்ன மருந்து கொடுப்பது ?

Sri A. GOVINDASAMY : இந்தத் தீண்டாமை ஒழிப்பு பிரசாரம் நகரங்களில் உள்ள சேரிகளில்தான் அதிகம் தேவைப்படுகிறது. அப்படி யிருக்க நகரங்களை விட்டுவிட்டு கிராமங்களில் ஏன் அதிக நடவடிக்கை எடுக் கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த பிரசாரம் கிராமங்களில் அதிகம் தேவைபடுகிறது. நகரங்களில் அவ்வளவு இல்லை. அப்படி யிருந்தாலும் அது தானாகவே மறைந்துவிடும் நகரங்களில் சேரிகளில் மட்டும் அல்லாது எல்லாப்பகுதிகளிலும் பிரசாரம் செய்ய வேண்டும் என்பதுதான் நோக்கம்.

Portrait of Tiruvalluvar in Government Buildings

* 103 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் பொதுக் கட்டிடங்களில் தமிழ்ப் பெரியார் திருவள்ளுவர் அவர்களின் உருவப் படத்தை வைப்பதற்குச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. VINAYAKAM : திருவள்ளுவர் திருவுருவத்தை இன்னும் அரசாங்கம் திட்டவட்டமாக சொல்லவில்லை. அவரின் ஜடையை நீட்டியும், விபூதியைப் பூசியும், பூணூலைக் குறுக்கே மாட்டியும் படத்தில் போட் டிருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு திட்டவட்டமான உருவத்தை பிரசுரிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : அரசாங்கத்தாரால் தயாரிக்கப் பட்ட திருவள்ளுவர் திருவுருவம் ஒன்றும் கிடையாது. மக்கள் அவரவர்களின் கருத்திற்கு தகுந்தாற்போல் உருவத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார் கள்.